விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மார்கழி 18 ஜ. ஆகிர. பிறை 15 இதழ்: 252

யாழ்ப்பாணம் புதன்கிழமை 2-1-1991

## படையினர் துப்பாக்கி வேட்டுக்களால் மகிழ்ச்சி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த செய்தியை அறிந்து கொண்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச படைகள், நேற்று நள்ளிரவு முகாம்களில் ஆரவாரம் செய்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர்.

இது குறித்து பாதுகாப்பு வட்டாரத்திலிருந்து உத்தியோகபூர்வமான அறிவித்தல் சகல படையினரின் முகாம்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து அனைத்து தாக்குதல்களும் நிறுத்தப்பட வேண்டும் என்றும் படைகளுக்கு உத்தரவிடப்பட்டது.

இதனையடுத்து முகாம்களிலிருந்து படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதலை நடாத்தியும், பரா வெளிச்ச குண்டுகளை விட்டும் மகிழ்ச்சி கொண்டாடினார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## புளொட், கூட்டணி வரவேற்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த யுத்த நிறுத்த அறிவிப்பைத் தமிழர் விடுதலைக் கூட்டணி, 'புளொட்' அமைப்புக்கள் வரவேற்றுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

★ போர்நிறுத்தத்திற்கு ஆதரவாக

# வடக்குகிழக்கு மாகாணங்களில் ராணுவ நடவடிக்கை நிறுத்தம்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சகல இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்று பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க படைகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்த வான், கடல், தரைமார்க்கமான தாக்குதல்களும், தேடுதல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளும் நேற்று முதல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

"வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள சகல சிறிலங்காப் படையினரின் முகாம்களுக்கும் இது தொடர்பான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த யுத்த நிறுத்தம் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும், இது தொடர்பாக நல்ல முடிவு ஒன்று எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (சி-க-ரி)

## இன்று முதல் வ. பி. போ. ச. ஊழியர்கள் கடமையாற்ற அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சேவையிலுள்ள சகல நிரந்தர ஊழியர்களையும் தத்தமது சாலைகளில் இன்று முதல் கடமையாற்றுமாறு வ. பி. போ. ச. பொது முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## அரசின் நிலைப்பாடு குறித்து ஜனாதிபதி இன்று அறிவிப்பார்

(கண்டி)

யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இன்று கண்டி தலதா மாளிகையிலுள்ள எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டுமக்களுக்குதெரிவிப்பார்.

ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டாவது ஆண்டு நிறைவினை இன்று கொண்டாடும் ஜனாதிபதி திரு. பிரேமதாசா நாட்டு மக்களுக்கான உரையொன்றினை நிகழ்தவுள்ளார்.

இந்த உரையின் போதே அவர் யுத்த நிறுத்தம் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை அறிவிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## சமாதானம் வேண்டி வழிபாடு

[யாழ்ப்பாணம்]

புதுவருடத் தினமான நேற்று யாழ். மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்கத் தேவாலயங்களில் நடைபெற்ற ஆராதனைகளில் சமாதானத்தை வேண்டி விசேடமாக வழிபாடுகள் நடைபெற்றன. [வி]

## பொதுசன உதவிப் பணம் இன்று வழங்கப்படும்

(மானிப்பாய்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன உதவிப் பணம் பெறுபவர்களுக்கு இன்று முதல் பணம் வழங்கப்படுகிறது;

ஆவணி, புரட்டாதி மாதக் கொடுப்பனவுகள் அப்பகுதித் தபாலகங்களில் வழங்கப்படும் என்று வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. நா. தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (71)

## வளைகுடாப் போருக்கு உடனடி தீர்வு காண்பதற்கு உலகத் தலைவர்கள் முயற்சி

[லண்டன்]

வளைகுடா நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு உலகத் தலைவர்கள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

சோவியத் அதிபர் கொர்பச்சேவ், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், பிரான்ஸ் அதிபா மித்ரோங் ஆகியோர் இம்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## நிவாரணப்பொருள் எடுத்துவரப்படும்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறைக்கு வரவுள்ள குமணக்கப்பலில் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 105 மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள் வரவுள்ளன.

இவ்வுணவுப் பொருட்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படவிருக்கிறது. [153]

## மட்டக்களப்பிற்கு உணவு எடுத்துச் செல்ல தடை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துவர இராணுவத்தால்

(4-ம் பக்கம் பார்க்க)

## காதல் தோல்வி இளம் ஜோடி சுருக்கிட்டு தற்கொலை

(யாழ்ப்பாணம்)

காதல் தோல்வியால் மனமுடைந்த இளம் ஜோடியினர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலைசெய்தனர்.

காரைநகர் 'சுரூர்ஞ' பீச்சில் இந்த இளம் ஜோடியின் சடலங்கள் கயிற்றில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## 2,000 குடும்பங்களுக்கு நிவாரண பொருள் உதவி

[யாழ்ப்பாணம்]

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்த இரண்டாயிரம் குடும்பங்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கே அதிகமாக இந்த நிவாரணம் வழங்கப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது. [153]

## கவச வாகனத்தால் மோதி இராணுவம் துன்புறுத்தல் ஆறு பிரயாணிகள் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் தமிழ் பிரயாணிகள் மீது இராணுவத்தினர் கவச வாகனத்தினால் மோதியதனால் ஆறுபேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பூந்தோட்டப் பகுதியில் நிலை

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**FUDO-TYPEWRITERS**

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும், சிறந்தமுறையில் திருத்தவும் FUDO 39/17, மின்சார நிலையவீதி 3-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணக்கிளை, பிரதான வீதி, மானிப்பாய்.
சி-4196

**உயர் கலை நூல்கள்**

B. Com. HNDA, NCA A/L கணக்கியலுக்கான நியமக்கிரயவியல் - பா. பாலச்சந்திரன், கணக்கியற் கோட்பாடுகள்-நல்லையா குமர குருபரன். விவரணப்புள்ளி விபரவியல்-செல்லையா இளங்குமரன் மற்றும்பல சில பிரதிகளே கைவசம். பூபாலசிங்கம் புத்தகசாலை - ஸ்ரீகாந், நல்லூர். (சி-4240)


## ஊக்குவிப்புபணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழக கல்வி சார்ந்த கல்வி சாராத உத்தியோகத்தர்களுக்கு 1989-ம் வருடம் ஜூலை மாதம் 5-ம் திகதி தொடக்கம் 89-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையுள்ள காலப்பகுதி ஊக்குவிப்பு கொடுப்பனவாக சம்பளத்தில் 50 வீதம் கொடுப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது,

இந்தமாதத்திலிருந்து மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்படவிருக்கிறது. (153]


**கொம்பியூட்டர் கல்வி**

கொம்பியூட்டர் கல்வி Basic Language திங்கள், புதன்வகுப்புகள் நேரம் 10-30-12-30. ஆரம்பம் 7-1-91. School of Business Administration, 16, 3-ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (சி-4221)


## சிமெந்தின் விலை குறைப்பு

(கொழும்பு)

சிமெந்தின் விலையை நாளை முதல் குறைப்பதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. தென் கொரியாவிலிருந்து பெருந்தொகையான சீமெந்தை லங்கா சீமெந்து கம்பனி இறக்குமதி செய்துள்ளகால் புத்தளம், காலி சீமெந்து பத்து ரூபாவால் குறைக்கப் பட்டுள்ளது. சீமெந்தின் உச்ச விலை நூற்றி அறுபது ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (எஸ்)

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 128வது ஜயந்திவிழா திருநெல்வேலி இராமகிருஷ்ண ஆலயத்தில் 7ம் தேதி திங்கட்கிழமை நடைபெறும்.

## இலங்கை மீண்டும் வெற்றி

(கல்கத்தா)

இந்தியாவில் நடைபெற்று வரும் ஆசியக் கிண்ணத்துக்கான ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில், இலங்கை தொடர்ச்சியான 2வது வெற்றியைப் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் கல்கத்தாவில் இலங்கைக்கும், பங்களாதேஷுக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் இலங்கை 77 ஓட்டங்களால் வெற்றிபெற்றது

முதலில் துடுப்பு எடுத்து ஆடிய இலங்கைக் கோஷ்டி, 45 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 249 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷ் 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, 177 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்படி போட்டியில் இலங்கை 4 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், இந்தியா 2வது இடத்தையும் வகிக்கின்றன, இவ்விரு கோஷ்டிகளுக்கும் இடையிலான இறுதி ஆட்டம் வியாழக்கிழமை நடைபெறும். (வி)

# போராளிகள் உறவினரும் தமிழகத்தில் கைது

(சென்னை)

தமிழகத்தில் அகதிமுகாம்களில் தங்கியிருந்த போராளிகளின் உறவினர்கள் என்ற போர்வையில் முன்னூற்றி பதினெட்டு இலங்கைத்தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழகப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் அனைவரும் தற்பொழுது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்! [எஸ்-ரி)

## திருமலை அகதிகளுக்கு முல்லைத்தீவில் 400 குடிசை வீடுகள்

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் அகதி குடும்பங்களுக்கு 400 குடிசை வீடுகளை யாழ். செஞ்சிலுவைச்சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க செயற்குழுவின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைத்துக் கொடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உடையார்கட்டு, மூங்கிலாறு. குமுளமுனை. பூதர்வயல், வீசுவமடு, வள்ளிபுரம் ஆகிய இடங்களில் மேற்படி குடிசை வீடுகள் அமைக்கப் பட்டுள்ளது. (153)

## தராசுப் படிகளுக்கு முத்திரை இடப்படுகிறது

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த யூன் மாதத்திற்குப்பின் நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரை இடுதல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பிரதேச சபைக்காரியாலயத்தில் இம் மாதம் 18ம் திகதி வரை நிறுவைகள், அளவைகள் உபகரணங்கள் சரிபார்த்து முத்திரையிடும் வேலை நடைபெறும்

சகல வர்த்தகர்களையும், பிரதி புதன் தவிர்ந்த வேலை நாட்களில் காலை 8.30 முதல் பிற்பகல் இரண்டு மணிவரை நிறுவைகள், அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிட்டுக் கொள்வதற்கு உடன் ஆவன செய்யும்படி யாழ். மாவட்ட உதவி உள்நாட்டு வர்த்தக திணைக்கள ஆணையாளர் திரு. எஸ். நித்தியராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார் [154]

## விவசாய பீடத்தில் ஆடு, மாடு, கோழி வளர்க்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் ஆடு. மாடு, கோழி வளர்ப்பு பண்ணைகள் ஆரம்பமாகவுள்ளது.

விவசாய பீடத்துக்கென வழங்கப்பட்ட 35 ஏக்கர் காணியில் இவற்றை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. இதற்கான 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் முடிவுக்குள் இப்பண்ணைகள் அமைக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கென் 3 ஏக்கரில் புல் வளர்ப்பு ஏற்கனவே விவசாய பீடத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இத்துடன் விவசாய உயிரியல் துறையினரால்கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் காளான் விதை உற்பத்தி நிலையங்களும் இம்மாதத்தில் நிறுவப்படவுள்ளன. இதற்கு 3 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (153)


# NAGALINGAM INSTITUTE

THIRUNELVELY.

# 92 A/L (Science)

ஆரம்பம் 05-01-1991

| | |
|---|---|
| ★ பௌதிகவியல்: | திரு. பத்மநாதன் |
| ★ இரசாயனவியல்: | திரு. மகாதேவன் |
| ★ விலங்கியல் | திரு. தம்பிராசா |
| ★ தாவரவியல்: | திரு. சிவவீரசிங்கம். |
| ★ தூய / பிரயோக கணிதம் | திரு. மகேஸ்வரன் |

G. C. E. (O/L) 90 & 91 வகுப்புகளும் 05-01-1991ல் ஆரம்பமாகின்றன.

(சி 4224)



## இலகுவான கடன் வசதிகள் பெறுவதற்கு

(I) வாடகைக் கொள்வனவிற்கு கடன்
(II) வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன்

# MERCHANT FINANCE LIMITED
# மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்,

555, நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோவில் மேற்கு வீதியடி),
த. பெ. இல. 93, யாழ்ப்பாணம்.

கூட்டிணைக்கப்பட்ட திகதி 02-05-1979
Registered with the Central Bank of Sri Lanka.
under the Control of Finance Companies Act. No. 27 of 1979)
Licence No. 34 -1 of 27-11-80.

இயக்குநர் சபை:

A சோமசுந்தரம்பிள்ளை, B. A., F. C. A. தலைவர், முகாமைத்துவ இயக்குநர்
S. மகேந்திரா, B. Sc. (Cey.) பிரதி முகாமைத்துவ இயக்குநர்
K. நடராசா B. Sc. (Econ.), Bar-at-Law, Attorney-at-law
C. மகேசன், Attorney-at-law
S. சிவஞானம், Retd. S. L. A. S.
செல்வி யோ. முருகேசு, A. C. A.
பேராசிரியர் செ. இராசரத்தினம் - பொருளியல்துறை, யாழ். வளாகம்

(A 948)



# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றேட், கோண்டாவில்.

**கல்வியாண்டு - 1991**

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புக்கள் 05-01-91ல் ஆரம்பமாகின்றன

ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இராசெல்வவடிவேல், |
| | — | திரு. உமாதேவி |
| கணிதம் | — | திரு. இந்திரன், |
| | | திரு. லோகேஸ்வரன், |
| | | திரு. வாமதேவன் |
| சமூகக்கல்வி | — | திரு. வேலா, செல்வி சுந்தரி, |
| | — | செல்வி நிர்மலா |
| தமிழ் | — | திரு. பண்டிதர், |
| | | திரு சுந்தரலிங்கம் |
| ஆங்கிலம் | — | திரு. மகாலிங்கம், |
| | — | திரு. ரமேஸ் |
| வர்த்தகம் | — | திரு. நவம் |

[ஏ-962]

## தலைவிதியும் தலைமுறைகளும்!

முடிமன்னர்களினதும், குடிமக்களினதும், தலைவிதியை நிர்ணயிக்கும் ஒப்பந்தங்கள் பிரகடனங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாளிகைகள், சதுக்கங்களில் வைத்து வெளியிடப்படுவது வழமையும், பெருமையும் உடையது.

லண்டனுக்கு பக்கிங்காம் மாளிகையும், அமெரிக்காவுக்கு வெள்ளை மாளிகையும், மாஸ்கோவுக்கு செஞ்சதுக்கமும் போல இலங்கைக்கு கண்டி தலதா மாளிகையும், வரலாற்று ரீதியான ஒப்பந்தங்கள் பிரகடனங்கள் செய்யப்பட்டமைக்கு பெயர் போனது!

1815 ம் ஆண்டு கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி, 1818-ம், 1848-ம் ஆண்டு கண்டிக் கலவரங்கள், 1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திரம அடைந்தமை ஆகிய வரலாற்று முக்கிய நிகழ்வுகளை அடுத்து, கண்டி தலதா மாளிகையில் அரசியல், மதரீதியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனங்கள் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வரலாறு மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது என்பது காலதேவனின் நியதி போலும்!

கடந்த நாற்பது ஆண்டுகால, ஈழத்தமிழர்களின் துன்பியல் தொடர்கதையும், பத்தாண்டுகால வெற்று வெடிப்புக்களும் இறுதி ஆறுமாத கால யுத்த பூகம்பத்தின் பின்னர்- கௌரவத்துடன் தமிழ் இனத்தின் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ள காலவரையறையற்ற யுத்த நிறுத்தம் சம்பந்தமாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இன்னும் சில தினங்களில் தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் ஆற்றவிருக்கும் பதில் உரை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

எண்கோணமண்டபம் என்னும்போது அங்கு வைத்து அவர் ஆற்றவிருக்கும் பதில் உரையானது இன, மத மொழி பேதம் என்ற ஒருபக்க நோக்கின்றி மனம் கோணா மனத்துடன் நாட்டு மக்கள் அனைவரினதும் மகிழ்வும் மதிப்பான வாழ்வை உறுதிசெய்யும் நல்லெண்ணத்துடன் செய்யப்படுமானால், வரலாறு உள்ள வரை அதன் முக்கியத்துவமும் பயனும் நீடித்து நிலைத்து நிற்கும்!

நாட்டுமக்கள் அனைவரினதும் தலைவிதியை நிர்ணயிப்பது என்பது தலைபோகும் தர்மசங்கடமான பொறுப்பு என்பது புரியாத புதிர் அல்ல!

தர்மம் தலைகாக்க, தன்தலைபோனாலும் பரவாயில்லை, என்ற தார்மீக தைரியத்துடன் செய்யப்படும் எத்தகைய பிரகடனமும், நாட்டு மக்கள் அனைவரினதும் தலையை மட்டுமல்ல, தலைமுறைகளையே காக்கும் என்பது மட்டும் உறுதியிலும் உறுதி!

— மயூரன்.

## சங்கானை பாடசாலைகளிலுள்ள அகதிகள்
# வேறு இடங்களுக்கு மாற்றம்

(சித்தன்கேணி)

சங்கானையிலுள்ள ஏழு அகதிகள் முகாம்களையும் அதிகாரிகள் குழுவொன்று நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளது. பாடசாலைகளில் இயங்கும் முகாம்கள் மூடப்பட்டு, பாடசாலைகள் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சங்கானையிலுள்ள ஏழு அகதிகள் முகாம்களையும் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம, பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா, போரூட் திட்ட இணைப்பதிகாரி திரு. க. கணேசலிங்கம், மானிப்பாய் மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர், கிராமசேவை அலுவலர்கள் ஆகியோரடங்கிய குழுவொன்று நேரடியாகச் சென்று பார்வையிட்டு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திலும், சங்கானை அ. மி. த. க. பாடசாலையிலுமுள்ள அகதி முகாம்கள் மூடப்பட்டு பாடசாலைகள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்வது என்றும் இரண்டு பாடசாலைகளிலுமுள்ள 132 குடும்பங்களையும் சங்கானையிலுள்ள சாந்தி படமாளிகையிலும், கலாசார மண்டபத்திலும், நிகர வைரவர் ஆலய கைத்தொழில் மண்டபத்திலும் தங்க வைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது

இந்த மண்டபங்களில் மலசலகூட வசதி செய்து கொடுக்கப்படவுள்ளது.

சங்கானை கலாசார மண்டபத்திலுள்ள 19 குடும்பங்களும் நிகர வைரவர் ஆலயக் கைத்தொழில் மண்டபத்திலுள்ள 24 குடும்பங்களும், மொத்தமாகவுள்ள 42 குடும்பங்களும் போரூட் நிறுவனத்தினரால் காரைநகர் வலந்தலைச் சந்தியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் குடியமர்த்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்கள் காரைநகர் மடத்துவளவு, தோப்புக்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## விசேட அலவன்ஸ்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகாரசபை யாழ். மாவட்ட ஊழியர்களுக்கு விசேட அலவலன்ஸ் வழங்குமாறு திணைக்களம் பணித்துள்ளது. இக்கொடுப்பனவு முதலில் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும். இத்தொகை எழுநூற்றிஐம்பது ரூபாய்க்கு குறையாமல் வழங்கப்படும். [எஸ்]

# என்ன சங்கதி?

கரவெட்டி திடலில் ஒரு செத்த வீடு. சங்கத்தானையிலிருந்த ஒருபெண் சென்றிருந்தார். அவர் தாய் வழி உறவு. போய்ச்சேர இரவு 8 மணியாகிவிட்டது. அங்கு சகலதும் முடித்து சுடலைக்கு போனவர்களும் திரும்பிவிட்டனர்.

இரவாகி விட்டதால் அப்பெண் அழுது குரல் எழுப்பாமல் துக்கம் விசாரித்து விட்டு தூங்கிவிட்டார். நள்ளிரவு அப்பெண் எழுந்திருந்து அழத்தாடங்குவிட்டார் அருகில் கிடந்த மற்றொரு பெண் 'விடியட்டும் அக்கா படுங்கோ என்று சொல்லியும் கேட்கவில்லை.

'பாவம் கவலை தாங்கவில்லை' என நினைத்து அந்தப் பெண்ணும் எழுந்து கட்டிப்பிடித்து அழுதார்.

சங்கத்தானை பெண் தன் கழுத்தைக் கையால் காட்டிக் காட்டி அழுதார். மற்றப் பெண். ஆம் அக்கா அவர் கழுத்தில் சுருக்கிட்டுத்தான் செத்தார்'' என்று ஒப்பாரி வைத்து அழுதார்.

''ஐயோ நான் அதைக்கேட்கவில்லை, என் இரவல் சங்கிலி தொலைந்து விட்டது'' என்று சங்கத்தானை பெண் குளறினார். பின் தான் விசயம் தெரிந்தது.

அயல் வீட்டில் 3 பவுண் சங்கிலி இரவல் வாங்கி போட்டு கொண்டுவந்திருக்கிறார். வழியில் தொலைந்து விட்டது.

இரவல் பொருட்களை தொலைத்தால் அதைப்போல் வேதனை எதுவுமில்லை. சொந்தப் பொருள் தொலைந்தால் பொறுத்துக்கொள்ளலாம். கோவில், கலியாண வீடு, செத்த வீடுகளுக்கு இரவல் நகைகள் வாங்கிச்செல்லும் வழக்கம் இப்பவும் இருந்து வருகிறது. அதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. இரவல் வாங்கித்தொலைத்தால் வாங்கியவருக்கும் பெரும்வேதனை. கொடுத்தவருக்கோ அதைவிட வேதனை,

'ஊரோடி

# மருந்துப்பொருளுக்கு தடை மக்கள் பெரும் அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த 20 - 30-12-1990 வரையான காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக கோவில்போரை சித்திரவேலாயுத சுவாமி கோவில், பெரிய போரைதீவு காளி கோவில், முனைத்தீவு பிள்ளையார் கோவிலடியில் வசித்த மக்கள் தற்போது அவ்விடங்களிலுள்ள கோவில்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இம்மக்களுக்கு போதிய உணவும், மருந்துப் பொருள்களும் செல்வதற்கு தடைவிதித்தும் அவ் இடங்களைவிட்டு வேறு இடங்களுக்கு மக்கள் செல்வதையும் இராணுவத்தினர் அனுமதிக்காது தடுத்து நிறுத்தியும் உள்ளனர்.

இதனால் இவ் அகதி முகாங்களில் தஞ்சமடைந்த மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். சிலர் ஆபத்தான கட்டத்தையும் தாண்டியுள்ளனர். (வி]

# யாருடையது?

கைதடியில் அடையாள அட்டை. ஒரு படத்துடன் சேர்ந்த மணிப்பேர்ஸ் ஒன்று யாழ். நகரைச் சேர்ந்த ஏ. கண்ணன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்,

0 0 0

மூன்று அடையாள அட்டைகளும் ஒரு தொகைப்பணமும் கொண்ட மணிப்பேர்ஸ்ஒன்று கோதீவு ஜெற்றியில் கண்டெடுக்கப்பட்டு நீர்வேலியைச் சேர்ந்த ஒரு அன்பரால் விடுதலைப் புலிகளின் சாவகச்சேரி வட்ட அவை பொறுப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி வட்ட அவை பொறுப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

நகுலேஸ்வரன் நிலாவதி, (பவானி) 698263016 V, வன்னேரிக்குளம், சிவசுப்பிரமணியம் நகுலேஸ்வரன், 640111828 V அக்கராயன் குளம் ஆகியோரின் அடையாள அட்டைகளும், திணைக்கள அடையாள அட்டை ஒன்றும் பேர்சில் இருந்தன.

# இராசி பலன்

**02-01-1991**

**புதன்கிழமை**

துதியை மு: இ: 9.14வரை புனர்பூசம் காலை 6.31 வரை, பூசம் பி. இ. 5.18 வரை, இராகுகாலம் பகல் 12.30 முதல் 2 00 மணிவரை, நல்ல நேரம் மாலை 5.00 மணிமுதல் 6 30 வரை.

மேடம்-நண்பர்கள்சகாயம், தாய்வழி உறவு, தொழில் பாராட்டு, குடும்பக்கலகலப்பு.

இடபம்-அதிகாரிகள் மறைமுகத் தொல்லை, தொழில் பாதிப்பு, புதிய சிந்தனை, சகோதர பாசம், அலைச்சல்.

மிதுனம் - செய்தொழில் விருத்தி, இனசன வரவு, அந்நியர் லாபம், குடும்பச் சந்தோசம், கடன்வரவு.

கடகம்- பெண் தொல்லை, குடும்பத்தில் கருத்துமோதல், நண்பர்கள் உதவி, மன விகாரம்.

சிம்கம்-விடாமுயற்சி, பொருள் கஷ்டம், அநாவசிய கலையீடு. குடும்பப்பிரிவு, அகால போஜனம்,

கன்னி-பதவிப் பொறுப்பு, தானதர்மம், வியாதிக் கஷ்டம், குடும்பக் கௌரவம்.

துலாம்-தடுமாற்றம், குறை கேட்டல், விபரீத எண்ணம், கற்பனை மிகுதி, குடும்பத் தொல்லை.

விருச்சிகம்-குடும்பச் சச்சரவு அலைச்சல், காரியத் தாமதம், நண்பர்கள் கவலை, செலவு.

தனுசு-தொழில்வகை உற்சாகம், பரோபகாரம், குடும்பத்தில் சுபகாரியம், வீண்தகராறு.

மகரம்-பதவிப்போட்டி, இடமாற்றம், பணியாள்தொல்லை, தயாள சிந்தை, விருந்துபசாரம்.

கும்பம் - சென்றவிடத்தில் விரோதம், தொழில் நஷ்டம், மனைவியால் துன்பம், குடும்ப நிம்மதியின்மை.

மீனம்-எதிர்பாராத பிரச்சனை, பெரியோர் ஆசி, நீண்ட நாள் நோய் தணியும், குடும்பத்தில் வெறுப்பு.

'ஜோஸ்யர்'

## பால்மா வகை அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

கடந்த ஜூன்மாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த வறிய குடும்பங்களில் உள்ள இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சன்மார்க்க சபையினர் பால்மா வகைகளை இலவசமாக வழங்கி உதவினார்கள். சபையின் டென்மார்க் நாட்டுப் பிரதிநிதி சேகரித்து அனுப்பி வைத்த நிதியில் இப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இதுவரை இவ்வுதவிகளைப் பெறாதவர்கள் தங்கள் குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்துடன் சன்மார்க்க சபைத் தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரையுடன் தொடர்புகொண்டு ஜனவரி 5ம் திகதிக்கு முன் பால்மா வகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# பலதும் பத்தும்

## ஒலிம்பிக் பந்தயப்

கிரேக்கநாட்டு மன்னர் தனதுநாட்டைச்சுற்றியுள்ள நாடுகள்மீது படையெடுத்து ஆட்சி செய்யவிரும்பினான். அதற்காக தமது மக்களை அரசு பலம்வாய்ந்தவர்களாக மாற்ற முயன்றது. அதற்கு துணைதரும் உடற்பயிற்சிகளை சகலரும் செய்ய வேண்டுமென அரசு கட்டாயப்படுத்தியது. போர்க்காலங்களைப் பயன்படுத்த கட்டான உடல்வலு அவசியமென அறிவுறுத்தப்பட்டனர். இதுவே இன்று ஒலிம்பிக் பந்தயம் உருவாக வழிசமைத்தது எனலாம்.

தற்காப்புக்காகவும் தாய்நாட்டைக்காக்கவும் பெற்ற உடல் வளத்தில் விளைந்த திறமையை வெளிக்கொணர, முதன் முதலில் ஒலிம்பிக் பந்தயம் கிரேக்க நாட்டில் ஒலிம்பியா என்னும் புனித மண்ணில் கி. மு. 776-ம் ஆண்டு ஆரம்பமானது. கிரேக்க நாட்டுக் கடவுள்களின் தலைமைக்கடவுள் சிலைக்கு தனிக்கோயில் ஒலிம்பியாவில் தான் உண்டு. முதல் ஒலிம்பிக்பந்தயம் இவ் வாலயத்தின்முன் தான் பக்திச் சிரத்தையுடன ஆரம்பமானது.

ஞானி

# அகதி முகாம்களிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா படைகளின் கெடுபிடியைத் தொடர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்கள், முகாம்களிலிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள பாடசாலைக் கட்டடங்களிலே தஞ்சமடைந்த மக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று 2-ம் திகதி தொடக்கம் இவ்வருட முதலாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இந்த அகதிகள் பாடசாலையை விட்டு வெளியேறி வேறிடங்களுக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எந்தக் காரணம் கொண்டும் இன்றுமுதல் இங்குள்ள பாடசாலைகளில் தங்குதவற்கு எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று மட்டு. மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ஏ. எம். யு. செனிவிரத்ன தலைமையில் மட்டகளப்பில் நடைபெற்ற மாநாடொன்றில் முடிவுசெய்யப்பட்டது. [23]

## மருத்துவ வசதியின்றி தொற்று நோயினால் பொதுமக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்திவு-மாவட்டத்தில் மலேரியா, வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்களினால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உடையார்கட்டு, முத்தையன்கட்டு, குமுளமுனை போன்ற கிராமங்களில் கூடுதலானோர் இந்நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ வசதிகளும், அடிப்படைச் சுகாதார வசதிகளும் இல்லாமையால் இந்நோய்கள் பெருமளவில் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153

### மட்டக்களப்பிற்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவுத் தடையை அகற்றி மக்கள் பசி பட்டினியின்றி வாழ அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவசர தந்தி ஒன்று மட்டக்களப்பு அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (23)

## இருநேரமாக இயங்கும்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் இந்துக்கல்லூரியில் இயங்கிவரும்வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர் வருகை அதிகரித்துள்ளமையில், இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே 10 ஆம் ஆண்டு முதல் 13ம் ஆண்டு வரையான வகுப்புகளைக் காலை 8 மணிக்கும். ஏனைய வகுப்புகளைப் பிற்பகல் ஒரு மணிக்கும் ஆராய்ந்து நடத்த இருப்பதாக மேற்படி வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

### காதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரைநகர் தோப்புக்காட்டைச்சேர்ந்த இருபது வயது இளைஞனும், பதினெட்டு வயது யுவதியுமே இவ்வாறு தற்கொலைசெய்தவர்களெனத் தெரியவருகிறது. (சி-ரி)

### படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சில முகாம்களில் வானத்தை நோக்கி கிரனைட் வீச்சும் இடம்பெற்றது.

படையினரின் இத்திடீர் நடவடிக்கையால் குறிப்பிட்ட முகாம்களின் சுற்றுடலிலுள்ள மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

புது வருடத்தினக் கொண்டாட்டம் போன்று படையினர் பட்டாசு வெடி கொளுத்தியும் மகிழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி]

## செயலகம் இன்று முதல் வழமைபோல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகம் இன்று முதல் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரை வழமைபோல் இயங்கும் என்றும் இதற்கு ஊழியர்கள் யாவரும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்றும் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

இளைப்பாற்றுத் திட்டத்தின் அடிப்படையில் இளைப்பாறியுள்ள ஊழியர்களின் வேலைகளையும் தற்போதுள்ள ஊழியர்களே பகிர்ந்து செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஊழியர்களின் போக்குவரத்து பிரச்சனை, மற்றும் வசதிகள் குறித்தும் வெகு விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் மேலதிக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (153]

## மாணவர்களின் விபரங்களை உபவேந்தர் கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு. பேராதனை பல்கலைக் கழகங்கள், தும்பறை வளாகம் ஆகியவற்றில் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் விபரங்களைத் தருமாறு யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளார்.

இவ்விபரங்கள் கிடைத்த பின்பே யாழ். பல்கலைக் கழக விரிவுரைகளுக்கு சமுகமளிக்காத மாணவர்களின் தொகை பற்றி அறியமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது7 சதவீதமான மாணவர்கள் யாழ். பல்கலைக் கழக விரிவிரைகளுக்குச் சமுகமளிக்கிறார்கள்.

இன்னும் இரு வாரங்களில் பல்கலைக்கழக மாணவர்களின் வருகைவிதம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (153)

## மரண அறிவித்தல்

### காயத்திரி சத்தியநாராயணசர்மா

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி (பாதுகாப்பு உத்தியோகத்தர்) சத்தியநாராயணசர்மா அவர்களின் அன்பு மனைவியும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர் புலவர் கா. வேல்முருகன் நாகேஸ்வரி அவர்களின் அன்பு மகளும், காரைநகர் இழவன் காடு குமரன் கோவில் ப. ஆறுமுகக்குருக்கள் சிவகாமசுந்தரி அவர்களின் அன்பு மருமகளுமான காயத்திரி 31-12-90ல் சிவபதப்பேறு பெற்றார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1-1-91இல் சம்புல்த்துறையில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:

புலவர் கா. வேல்முருகன்.

வள்ளுவர் வாசம்,
செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு. (சி-4229)

### கவச வாகனத்தால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ள இராணுவத்தினர் கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்த பிரயாணிகளை கவச வாகனத்தினால் மோதினார்கள்.

இதேபோன்று தமிழ்பிரயாணிகள் மீது தொடர்ச்சியான துன்புறுத்தல் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ரி-வி)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registired as a News Paper at the General Post Office Sri Lanka undər nnmber B/100306/81.

## உணவு விநியோகம் குறித்த கணக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஒரு வாரத்திற்கு உணவு விநியோகத்தினை மேற்கொள்வதற்கு 1261105கிலோ அரிசி தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

கோதுமைமா 509036 கிலோவும், சீனி 287206 கிலோவும், பருப்பு 143604 கிலோவும் தேவைப்படுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. (153)

## கைதடி விவசாயிகளுக்கு ரி. ஆர். ஆர். ஓ. உதவி

(யாழ்ப்பாணம்)

கைதடியிலுள்ள 25 விவசாயிகளுக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் (ரி. ஆர். ஆர். ஓ) கடனுதவிகளை வழங்கியுள்ளது.

கைதடி மேற்கு சரஸ்வதி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக இந்த உதவி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மண்வெட்டி, கடகம் போன்றவற்றையும் மேற்படி கழகம் விவசாயிகளுக்குவழங்கவுள்ளது.

## கடுமையான நோயாளரையே வார்ட்டில்அனுமதிக்குமாறு பணிப்பாளர் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு உணவு வழங்குவதில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருப்பதால் கடுமையான நோயாளர்களையே வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சைபெற அனுமதிக்கவேண்டுமென்று யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் கடந்த வாரம் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இவ்வருடத்தில் யாழ். பிராந்திய வைத்தியசாலைகளில் உணவு விநியோகத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க அதிகளவு நிதி செலவிடப் பட்டுள்ளதாகவும், நிதிப் பற்றுக்குறை நிலவுவதால் இதில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமானதென்றும், ஆகவே இனிமேல் வார்ட்டுகளில் கடுமையான நோயாளர்களையே அனுமதிக்கவேண்டும் என்றும் இச்சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (72)

## சக்றின் கலந்த — சோடா தயாரிக்கும் தொழிற்சாலை கண்டுபிடிப்பு

(காங்கேசன்துறை)

உடலுக்கு தீங்கு இழைக்கும் 'சக்றின்' கலந்து சோடா தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த இரு தொழிற்சாலைகள் சுகாதாரப் பகுதி அதிகாரிகளின் திடீர் சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டன.

சாவகச்சேரி பகுதியில் உள்ள மிருசுவில் மீசாலை ஆகிய இடங்களில் இத்தொழிற்சாலைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் திரு. த. மகாதேவன் தலைமையில் சென்ற சாவகச்சேரி சுகாதார அதிகாரிகள் குழுவினர் இத்தொழிற்சாலைகளைக் கண்டுபிடித்து 'சோடா' தயாரிப்பில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த சோடா தயாரிப்பதற்கு பழைய யானை மார்க் சோடா போத்தல்களும். ''கொக்கோகோலா'' போத்தல்களும் பயன்படுத்தப்பட்டதாகவும் ஏற்கனவே பயன்படுத்திய மூடிகளை சேகரித்து போத்தல்கள் அடைக்கப்பட்டிருந்ததாகவும், போத்தல்கள் சரியாக சுத்திகரிக்கப்பட்டிருக்கவில்லை யென்றும் உடலுக்கு தீங்கு இழைக்கும் 'சக்கறின்' கலக்கப்பட்டிருந்ததாகவும்யாழ் மாவட்டஉணவு மருந்து பரிசோதகர் திரு. மகாதேவன் தெரிவித்தார்.

'லேபல்' எதுவுமின்றி விற்கப்படும் இந்த 'சோடா' பாவனையை பொதுமக்கள் தவிர்க்கவேண்டுமெனவும், வியாபாரிகள் விற்பனை செய்யக்கூடாதெனவும் அவர்கோரியுள்ளார். ((86)

### வளைகுடாப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வளைகுடாப் பிரச்சனையில் அமைதி ஏற்படுத்தும் முகமாக ஜோர்தான் மன்னர் ஹுசேன் பிரிட்டன், இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குத் திடீர் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் போரின் அபாயம் குறித்து ஈராக்கை எதிர்த்து நிற்கும் நாடுகளை எச்சரித்துள்ளார்.

குவைத்தை விட்டு ஈராக் வெளியேறுமாறு ஐக்கிய நாடுகள் சபை விடுத்த காலக்கெடு முடிவடைவதற்கு இன்னும் இரு வாரங்கள் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் உலகத் தலைவர்கள் வளைகுடாவில் அமைதி ஏற்படுத்த முனைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. [க]

### புளொட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சிறிலங்கா அரசை வற்புறுத்திக் கேட்டுள்ளது. [க]

### இன்று முதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடமைக்கு சமுகமளிக்க முடியாதவர்கள் தமது சொந்த விடுமுறைக்கு விண்ணப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். [ரி]